# வானவில்

VAANAVIL
ISSUE – 57 SEPTEMBER 2015

இதழ் - 57 புரட்டாதி 2015



# இனப் பிரச்சினைக்கு மைத்திரி – ரணில் அரசின் திட்டம் தீர்வுத் திட்டம் என்ன?

தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு மைத்திரிபால சிறிசேன – ரணில் விக்கிரமசிங்க அரசு என்ன வகையான தீர்வு காணப் போகின்றது, எப்பொழுது காணப் போகின்றது, என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களிலும், தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் எழுந்திருக்கின்றது.

அந்தக் கேள்வி எழுவதில் ஒரு நியாயப்பாடு இருக்கின்றது. அதாவது இவ்வருடம் ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, எவ்வித நிபந்தனையும் இல்லாமல் பொது எதிரணியின் வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்திருந்தது. அவரும் வெற்றி பெற்றார்.

அதன் பின்னர் சில வைபவங்களில் பேசும் பொழுது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், 'ஜனாதிபதி மீது எமக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர் எப்படியும் 2016இல் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பார்' எனப் பேசியிருந்தார்.

அதன் பின்னர் ஓகஸ்ட் 17ஆம் திகதி பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரும் பின்னரும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமையில் அமையும் அரசாங்கத்தைத் தமது கூட்டமைப்பு ஆதரிக்கும் எனவும்




திரு.சம்பந்தன் கூறியிருந்தார். அத்துடன், இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு ஏதுவாக தம்மை ஏகப் பெரும்பான்மையாகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யுமாறும் தமிழ் பேசும் பொதுமக்களிடம் கோரியிருந்தார். மக்களும் அவ்வாறே கூட்டமைப்பின் சார்பில் 16 உறுப்பினர்களைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்திருந்தனர். அதுமட்டுமல்லாது, ஜனநாயக விரோதமாக என்றாலும், திரு.சம்பந்தன் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், 'இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக ஜனாதிபதியுடன் பேசியுள்ளீர்களா?' என சில ஊடகவியலாளர்கள் சம்பந்தனிடம் கேட்டதிற்கு, 'அது பற்றி இப்பொழுது சொல்ல மாட்டோம். தேர்தல் முடிந்த பின்னரே அதுபற்றிச் சொல்லுவோம்' எனவும் பொடிவைத்துச் சொல்லியிருந்தார். அந்தப் பதிலின் அர்த்தம் என்னவெனில், ஜனாதிபதியுடன் கூட்டமைப்பு இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக ஏதோ பாரதூரமாகப் பேசியிருப்பது போலவும், அவர்கள் கண்ட இணக்கப்பாடு குறித்து தேர்தலுக்கு முன்னர் தெரிவித்தால், மகிந்த ராஜபக்ச தலைமையிலான 'சிங்களப் பேரினவாதிகள்' அதை வைத்துப் பிரச்சாரம் செய்து வெற்றி பெற்று விடுவார்கள் என்ற காரணத்துக்காகவே தாங்கள் அதை வெளியிடவில்லை என்ற அர்த்தத்தைத் தமிழ் பேசும் மக்களுக்கு அளிப்பதுதான்.

உண்மையும் அதுதான். இம்முறை பொதுத் தேர்தலின் போது கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு முன்னால் சென்று சொல்வதற்கு எதுவும் இல்லாமல் இருந்தது. அதுமாத்திரமின்றி, கூட்டமைப்பு மீது முன்னெப்போதையும் இல்லாத அளவுக்கு மக்கள் நம்பிக்கையும் இழந்திருந்தனர். அது கூட்டமைப்புத் தலைமைக்கும் தெரிந்திருந்தது. கருத்துக் கணிப்புகளின்படி, யாழ்ப்பாண மாவட்டத்திற்கென

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..

# இலங்கை இறையாண்மை முற்றுகைக்குள் !

**இ**ம்மாதம் 16ந் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை தொடர்பாக மீண்டும் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. ஐ.நா.மனித உரிமை பேரவையின் இவ்வாறான அறிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் 2009 இல் ஒரு தடவையும், பின்னர் தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளாகவும் (2012 – 2015) வெளிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் கால் நூற்றாண்டுக்கு மேலாக நீடித்த உள்நாட்டு யுத்தம் 2009 இல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும், 2011 இற்கு பின்னரே திடீரென்று ஐ.நா.ம.உ. பேரவை விழித்துக் கொண்டு, இலங்கையின் மனித உரிமைகள் பற்றி கறாராகப் பேசத் தொடங்கியுள்ளார்கள். அத்துடன் 9 ஆண்டு (2002 – 2011) காலப்பகுதியை மாத்திரமே தெரிந்து எடுத்து வைத்துக்கொண்டு, இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக சொல்கிறார்கள். குறிப்பாக இந்தக் காலப்பகுதியை தெரிந்தெடுத்ததின் பின்னணி என்னவாக இருக்கலாம் என்பதை உணரக்கூடியவர்களால்தான், இலங்கை தொடர்பான இவர்களது (அரசியல்) நிகழ்ச்சி நிரலையும் புரிந்து கொள்ள முடியும்.

2009 இற்கு முன்னர் ஒரு போதுமே இலங்கை தொடர்பாக பெரிதாக ஒன்றும் அலட்டிக்கொள்ளாத ஐ.நா.ம.உ. பேரவை, 2011 இற்கு பின்னர், அதுவும் யுத்தம் முடிவுற்று 2 வருடத்தின் பின்னர், அறிக்கைகளுக்கு மேல் அறிக்கைகளாக வெளியிடத் தொடங்கியதற்கான உண்மையான பின்னணி என்னவாக இருக்கலாம் என்று ஆராய்ந்து பார்த்தால், எங்களுக்கு ஒரேயொரு காரணம் மாத்திரமே தெரிய வரும்.

அந்தக் காரணம் 2009 இல் வன்னியில் பல ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்படுவதற்கு இலங்கை அரச படைகளும் புலிகளும் சூத்திரதாரிகளாக இருந்தார்கள் என்பதாக நிட்சயம் இருக்க முடியாது. ஏனெனில் வன்னி யுத்தம் இரகசியமாக நடைபெறவில்லை. இலங்கை அரச படைகளின் வேகமான முன்நகர்வும், புலிகள் மக்களை கேடயங்களாக பிடித்து வைத்திருந்தவாறு பின்வாங்கி முல்லைத்தீவை நோக்கி ஓடிக் கொண்டிருந்ததும், சகலருக்கும் தெரிந்தே இருந்தது. பின்வாங்கி ஓடும் புலிகளின் பிடியிலுள்ள மக்களை விடுவிக்கும்படி பலதரப்பிலிருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் புலிகளோ ஆயுத முனையில், தாங்கள் கேடயமாக பிடித்து வைத்திருந்த மக்களிடமிருந்து பிள்ளைகளைப் பறித்து போர் முனைக்கு அனுப்பினார்கள். வன்னியில் மக்களின் அழிவைப்பற்றி இப்போது (முதலைக்)கண்ணீர் வடிப்பவர்கள், அப்போது புலிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்தார்களன்றி மக்கள்பற்றி கிஞ்சித்தும் கவலைப்படவில்லை.

அந்தக் காரணம் மகிந்த ராஜபக்ச தலைமையிலான இலங்கை அரசின் ஏகாதிபத்திய நலன்களுக்கு விரோதமான போக்கே. அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் தங்கள் நிகழ்ச்சி நிரல்களுக்கு அடிபணியாதவர்கள் மீது ஐ.நா. சபையூடாக நெருக்கடிகளை கொடுப்பதில் கைதேர்ந்தவர்கள். அதாவது ஏகாதிபத்திய நவகாலனித்துவ ஆதிக்க சக்திகளின் பொம்மை அரசுகளாக செயற்பட மறுக்கும் நாடுகளின் மீது மனித உரிமை அளவு கோல்களை கடுமையாக பிரயோகித்தல் இல்லாவிடின், அவ்வாறான நாடுகள் தடை செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருக்கின்றதாக குற்றஞ்சாட்டுதல் போன்ற வழக்கத்தினை இந்த சக்திகள் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாகவே, 2013 இலும் 2014 இலும் இலங்கை தொடர்பாக ஐ.நா.ம.உ. பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசு உடன்படவில்லை.

இலங்கைக்கு எதிராக ஐ.நா.ம.உ. பேரவையில் அறிக்கைகளை வரைவதிலும், பின்னர் அதனை தீர்மானங்களாக நிறைவேற்றுவதிலும் வெளிப்படையாக அமெரிக்காவே முன்னின்று செயற்படுகின்றது. 1945 இல் ஹிரோசிமா, நாகசாகி நகரங்கள் மீது (ஜப்பான்) அணுகுண்டுகள் வீசியதும், 1972 இல் வியட்நாமில் நேபாம் எரி குண்டுகளை பொழிந்ததும், ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா, யேமன், சிரியா மீதான தரைவழி மற்றும் விமானத்தாக்குதல் நடாத்தியதும், நடாத்திக் கொண்டிருப்பதும், மத்திய கிழக்கு இஸ்லாமியர்களுக்கு எதிரான அனைத்து யுத்தங்களிலும் இஸ்ரேலுக்கு முண்டு கொடுத்து வருவதும் இதே அமெரிக்காதான். ஒருபுறம் மனித உரிமைகளை மிதித்தும் மறுபுறத்தில் தன்னை ஒரு உலகத்தின் 'பொலிஸ்காரனாக' காட்டிக்கொள்ளும் அமெரிக்கா, இலங்கை விவகாரத்திலும் 'மனித உரிமை' என உதட்டில் முணுமுணுத்தவாறு பல விதமான கபட நோக்கங்களுடனேயே செயற்படுகின்றது என்ற விழிப்புணர்வு இன்னமும் பரவலாக ஏற்படவில்லை. அல்லது அந்த விழிப்புணர்வு தூண்டப்படுவதை ஏகாதிபத்திய அடிவருடித்தனமும் தமிழ் தேசியமும் தடுத்து வருகின்றது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் என்பது நீண்ட வரலாற்றைக் கொண்டது. இந்த மனித உரிமை மீறல்கள் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக மாத்திரமன்றி இலங்கையின் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்களுக்கு எதிராகவும் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பது இலங்கையின் வரலாற்றை திரும்பிப்பார்த்தால் தெரியும். இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பற்றி நியாயமாக பேசுவதனால் ஆகக்குறைந்தது 1971 ஜே.வி.பி. கிளர்ச்சியிலிருந்தாவது ஆரம்பிக்கப்பட வேண்டும். அத்துடன் இந்திய அமைதிப்படையினர் புரிந்த மனித உரிமை மீறல்களும் கணக்கில் எடுக்கப்பட வேண்டும். இதைவிடுத்து தங்களுக்கு இசைவாக 9 ஆண்டு காலப்பகுதியை பிய்த்தெடுத்து வைத்துக்கொண்டு, கலப்பு நீதிமன்றம் அமைத்து விசாரிக்க வேண்டுமென்று ஐ.நா.ம.உ. பேரவை அறிக்கை விடுவது ஏதோ உள்நோக்கம் கொண்டது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இவ்வருடம் ஜனவரியில் நிகழ்ந்த ஜனாதிபதித்தேர்தலிலும் ஓகஸ்டில் நிகழ்ந்த பாராளுமன்ற தேர்தலிலிலும் மைத்திரி – ரணில் – சந்திரிகா அரசை நிறுவுவதில் வெற்றி கண்ட ஆதிக்க சக்திகள், அதனை இலங்கையில் நீண்ட காலம் நிலை கொள்ள வைக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளன. அந்த முயற்சியின் ஒரு பகுதியாகவே ஐ.நா.ம. உ. பேரவை பயன்படுத்தப்படுகின்றது. எனவே மைத்திரி – ரணில் – சந்திரிகா அரசை தூக்கியெறிவதின் மூலம் மாத்திரமே, ஐ.நா.ம.உ. பேரவையுடன் நியாயமான அணுகுமுறையை இலங்கை அரசு மேற்கொள்ள முடியும். *

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

# யார் சொல்வது உண்மை? சம்பந்தனா அல்லது சுமந்திரனா?




**ச**மீபத்தில் கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்கள மொழிப் பத்திரிகை ஒன்றுக்கு செவ்வி அளித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஆ.சுமந்திரன், 'தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும்படி கோரவில்லை' என்றும், 'முற்றுமுழுதாக அதிகாரத்தைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோருவதாகவும்' கூறியிருக்கிறார். அதற்கு அவர் சொன்ன காரணம், 'அதிகாரத்தை பகிர்வதாகக் கூறி வழங்கும் அதிகாரத்தை மத்திய அரசாங்கத்தால் மீண்டும் எடுத்துக் கொள்ள முடியும்' என்பதே.

சுமந்திரனின் இந்தச் செவ்வியைப் படிக்கும்போது, 'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுகிறதோ?' என்று எண்ணத் தோன்றுகிறது. அதாவது தமிழரசுக் கட்சி 1976ல் வட்டுக்கோட்டையில் நிறைவேற்றிய 'தனித்தமிழீழ'த் தீர்மானத்துக்குத் திரும்பிச் செல்கிறதோ என்ற ஐயம்தான் எழுகிறது.

அதேநேரத்தில், அவரது கூற்று அவரது கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், 2009ல் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் அடிக்கடி கூறிவரும், "ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு" என்ற கருத்துடன் பெரிதும் மாறுபாடாகவும் இருக்கிறது.

தமிழரசுக் கட்சி உருவானபோது முன்வைத்த 'சமஸ்டி' கொள்கையும், பின்னர் 1976ல் முன்வைத்த 'தனிநாடு' தீர்மானமும் அப்படியே இருக்க, இன்றைய மாறியுள்ள அரசியல் சூழ்நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பதை தமிழரசுக் கட்சியோ அல்லது அது தலைமைதாங்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்போ முன்வைக்காத நிலையில், சம்பந்தனின் கருத்துக்கும் சுமந்திரனின் கருத்துக்கும் இடையிலான பாரிய வேறுபாடு, தமிழர் பிரச்சினைக்கு அவர்களிடம் எந்தவிதமான தீர்வுத் திட்டமும் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான தீர்வையும் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிராகரித்துக் கருத்துச் சொன்ன நிலையில், அவர்களிடம் தமிழர் பிரச்சினைக்கு இன்று உருப்படியான தீர்வு எதுவும் இல்லை என்பதே திட்டவட்டமான உண்மை. இந்த நிலையில், அந்தச்



'சாம்பார் கட்சி'யில் உள்ளவர்கள் ஆளாளுக்கு நேரத்துக்குத் தகுந்த மாதிரி ஏதாவது ஒரு கருத்தைச் சொல்லி வருகின்றனர். இதுபற்றி தமிழ் பொதுமக்களும் ஒருபோதும் அவர்களிடம் கேள்வி எழுப்பியது கிடையாது. தேர்தல் நேரத்தில் மட்டும் 'உலகம் எம்மை உற்றுப் பார்க்குது, எனவே எமது பலத்தைக் காட்ட எமக்கு வாக்களியுங்கள்' என்று சொல்லி, வாக்குக் கொள்ளையில் ஈடுபடுவார்கள். அதுபற்றியும் தமிழ் பொதுமக்களுக்கு எவ்வித கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தச் சூழ்நிலையில், அதிகாரப் பகிர்வையே வேண்டாம் என்று நிராகரிக்கும் சுமந்திரனின் தமிழரசுக் கட்சி, இரண்டு தடவைகள் அதனிலும் குறைவான அதிகாரப் பரவலாக்க திட்டங்களை ஏற்றுள்ளது என்பதை இங்கு விவரிப்பது எமது வாசகர்களுக்குப் பயன் தரும்.

1965ல் தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரசும், 'தேசிய அரசாங்கம்' (இன்றும் ஒரு தேசிய அரசாங்கம் பற்றி ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் பேசுகின்றனர்) என்ற போர்வையில், ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) தலைமையிலான 7 கட்சி கூட்டாட்சியில் அங்கம் வகித்தபோது, பிரதமர் டட்லி சேனநாயக்கவுக்கும், தமிழரசுக் கட்சித் தலைவர்

எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துக்கும் இடையில் வடக்கு கிழக்கில் 'மாவட்ட சபைகள்' அமைப்பது சம்பந்தமான ஒரு ஒப்பந்தம் கைச்சாத்தானது. (ஆனால் பின்னர் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை) அதேபோல, 1977ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஐ.தே.க. அரசு அமைந்தபோது, தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் 'மாவட்ட அபிவிருத்திச் சபைகள்' அமைப்பது சம்பந்தமான உடன்பாடு ஒன்றை ஜே.ஆர். கண்டார். (அதுவும் அதிக காலம் உயிர் வாழவில்லை)

இந்த இரு திட்டங்களும் உண்மையில் அதிகாரப் பகிர்வோ அல்லது இனப்பிரச்சினைக்கான தீர்வுகளோ அல்ல. இவை மத்தியிலுள்ள அதிகாரங்களை மாவட்டங்களுக்கு விஸ்தரித்து, அதிகாரப் பரவலாக்கம்' (Decentralization of Powers) செய்து, ஒற்றையாட்சியைப் பலப்படுத்தும் திட்டங்களாகும். முதலில் தமிழ் மக்களுக்கு சமஸ்டியும், பின்னர் தனிநாடும் கோரியவர்கள் இவற்றை எப்படி ஏற்றுக் கொண்டார்களோ தெரியவில்லை.

ஆனால், 1957ல் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, செல்வநாயகத்துடன் செய்து கொண்ட 'பண்டா – செல்வா ஒப்பந்தம்', வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிராந்திய சபைகள் (Regional Councils) அமைக்கவும், தேவையேற்பட்டால் அவை ஒன்றிணைந்து செயற்படவும் வழிவகுத்தது. (ஒரு வகையில் தமிழரசுக் கட்சி முன்வைத்த சமஸ்டி அல்லது கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த பிரதேச சுயாட்சி – Regional Autonomy – திட்டத்தை ஒத்தது இது)

அதேபோல, 2000ம் ஆண்டில் சந்திரிக அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 'தீர்வுப் பொதி'யும், வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களை ஒன்றிணைத்து, 'பிராந்தியங்களின் ஒன்றியம்' அமைப்பது என்ற தீர்வை முன்வைத்தது. பண்டாரநாயக்கவின் அரசும், அவரது புதல்வி சந்திரிகவின் அரசும், 1957இலும் 2000ம் ஆண்டிலும் முன்வைத்த தீர்வுகள், ஒற்றையாட்சிக்கு மாற்றான, உண்மையான அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் (Devolution of Powers) தீர்வுகளாகும்.

ஆனால் 'இந்த இரண்டு தீர்வுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டால், நாடு பிளவுபட்டு தமிழர்களுக்கு ஒரு தனிநாடு கிடைத்துவிடும்' என்று சொல்லி, ஐ.தே.க. இனவாதக் குழப்பங்களை உருவாக்கி, அந்தத் தீர்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த விடாமல் தடுத்துவிட்டது. அந்த நேரத்தில் அந்தத் திட்டங்களை பண்டாரநாயக்க அரசுகள் அமுல்படுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டிய தமிழரசுக் கட்சி, மறைமுகமாகவும், நேரடியாகவும், ஐ.தே.கவின் எதிர் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தது. அதிலும் குறிப்பாக, சந்திரிக அரசு முன்வைத்த தீர்வுத் திட்டத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சிங்கள பேரினவாதக் கட்சிகளான ஐ.தே.க., ஜே.வி.பி., ஹெலஉருமய போன்ற கட்சிகளுடன் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியும் எதிர்த்து வாக்களித்தது.

அதிலும், இன்று சுமந்திரன் அச்சம் தெரிவிக்கும், அதிகாரத்தை பங்கிட்டுக் கிடைக்கும் அதிகாரங்களை மத்திய அரசு திரும்ப எடுத்துக் கொள்ளும் என்ற விடயத்தில், அரசியல் அமைப்பு ரீதியாக சந்திரிக அரசின் தீர்வுத் திட்டத்தில் பலமான உத்தரவாதமும் செய்யப்பட்டிருந்தது. அதாவது, 'பிராந்தியங்களின் ஒன்றியத்தின் அனுமதி இன்றி, மத்திய அரசு பிராந்திய அரசின் அதிகாரத்தை மீள எடுத்துக் கொள்ள முடியாது' என்ற சரத்தும் அந்தத் தீர்வுத் திட்டத்தில் உள்ளடங்கி இருந்தது.

அதுமாத்திரமின்றி, டி.எஸ்.சேனநாயக்கவின் ஐ.தே.க. அரசு 1947 பொதுத் தேர்தலின் பின்னர் பறித்தெடுத்த, மலையக இந்திய வம்சாவழித் தமிழர்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும், அரசியல் லாபம் கருதி 1977ல் பதவிக்கு வந்த ஜே.ஆர். அரசு திரும்பக் கொடுத்த போதிலும், அந்தத் தீர்மானம் ஒரு சாதாரண நாடாளுமன்றப் பெரும்பான்மையின் மூலமே நிறைவேற்றப்பட்டது. அதனால் அந்தத் தீர்மானம் இன்னுமொரு சாதாரண நாடாளுமன்றப் பெரும்பான்மை மூலம் ரத்துச் செய்யப்பட்டு, அந்த மக்கள் மீண்டும் நாடற்றவர்கள் ஆகும் நிலை (இன்றுவரை) இருக்கின்றது. அவர்களது பிரஜாவுரிமையையும் மாற்ற முடியாதவாறு சந்திரிக அரசின் தீர்வுத் திட்டத்தில் சரத்துகள் உள்ளடங்கி இருந்தன. இதைத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐ.தே.கவுடனும் இதர சிங்களப் பேரினவாத சக்திகளுடனும் இணைந்து எதிர்த்து வாக்களித்து முறியடித்தது.

தமிழ் மக்களுக்கு உண்மையான அதிகாரப் பகிர்வு வழங்கிய தீர்வுகளை எதிர்த்த தமிழ் தலைமைகள், அதற்குப் பதிலாக அதனிலும் குறைவான அதிகாரப் பரவலாக்கத் திட்டத்தை ஏற்ற தமிழ் தலைமைகள், இன்று அதிகாரப் பகிர்வு வேண்டாம், முழுமையான அதிகாரம்தான் வேண்டும் என்று (சுமந்திரன் போன்றவர்கள்) கோருவது பித்தலாட்டமே அன்றி வேறு ஒன்றுமல்ல. இவர்களது முழு நோக்கமும் ஒரு பிச்சைக்காரன் எப்படித் தனது கால் புண்ணை மாற்றாமல் வைத்திருந்து, அதையே தன் வாழ்நாள் முழுவதும் பிச்சை எடுப்பதற்குப் பயன்படுத்துவானோ, அதேபோல இனப்பிரச்சினையைத் தீரவிடாது வாழ்நாள் முழுக்க அதைக்காட்டியே தமிழ் மக்களிடம் அரசியல் செய்வதுதான் இவர்களது ஒரே நோக்கம்.

இவர்களது செயல்பாட்டை நோக்கும்போது, ஒரு சாதாரண கிராமப்புற வயோதிபர் ஒருமுறை சொன்னதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. அவர் சொன்னார்: "இவங்கள் முதலிலை தாகத்துக்கு தண்ணி கேப்பாங்கள். தண்ணி கொடுத்தால், அது வேண்டாம், பால் தா என்பாங்கள். பாலைக் கொண்டு வந்து கொடுத்தா, அது வேண்டாம்,

**தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...**

# தாமரையின் ஊழல் முகம் !



மக்களின் அவநம்பிக்கையைப் பெற, காங்கிரஸுக்கு 10 ஆண்டு காலம் தேவைப்பட்டது. ஆனால் பாரதிய ஜனதா கட்சியோ, ஒரே வருடத்துக்குள் மாபெரும் மக்கள் அதிருப்தியைச் சம்பாதித்திருக்கிறது. காங்கிரஸை மக்கள் நிராகரிக்க ஊழல் காரணம் என்றால், இந்த ஓர் ஆண்டில் பா.ஜ.க அரசின் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளும் சர்ச்சைகளும் ஒவ்வொரு நாளும் சந்தி சிரிக்கின்றன. ஆனால் எதைச் செய்தால் நாட்டின் நலம் நன்றாக இருக்குமோ, அந்த விஷயங்களில் எதிர்வினையாற்றாமல் மௌன சாமியாராக இருக்கிறார் மோடி. இவரும் இவரது கட்சியினரும்தான் மன்மோகன் சிங்கை பேசாத பொம்மை என்றார்கள். இன்று அந்தக் கேள்விகள் இவர்களை நோக்கியே திரும்பி நிற்கின்றன.

கேள்வி 1: படிக்க அமெரிக்கா சென்று, அங்கு போதைப்பொருள் வழக்கில் சிக்கியவர் லலித் மோடி. இந்தப் பின்னணி கொண்ட நபரைதான் ராஜஸ்தான் மாநில கிரிக்கெட் சங்கத் தலைவர் ஆக்கினார், அப்போதைய ராஜஸ்தான் முதலமைச்சர் வசுந்தரா ராஜே. ஐ.பி.எல் ஊழல்கள் பெரிதாக வெடித்தபோது லலித்மோடியின் மீது சுமார் 1,700 கோடி ரூபாய் ஊழல் குற்றச்சாட்டுகள் கிளம்பின. இதைத் தொடர்ந்து லண்டனுக்குத் தப்பி ஓடி தலைமறைவானார் லலித் மோடி. இப்போது வரை அவர் தேடப்படும் குற்றவாளிதான். இந்தக் குற்றவாளிக்குத்தான் போட்டிபோட்டு உதவியிருக்கின்றனர் ராஜஸ்தான் முதலமைச்சர் வசுந்தரா ராஜேவும், மத்திய அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜும்.

2011-ம் ஆண்டு லலித் மோடியின் லண்டன் குடியேற்ற ஆவணங்களில், 'இந்திய அரசுக்குத் தெரியக் கூடாது என்ற நிபந்தனையின் பெயரில், இந்தக் குடியேற்ற விண்ணப்பத்தை ஆதரிக்கிறேன்' எனக் கையெழுத்திட்டிருக்கிறார் வசுந்தரா. லலித் மோடியின் லண்டன் குடியேற்றத்துக்காக, இங்கிலாந்து அரசிடம் பரிந்துரை செய்திருக்கிறார் சுஷ்மா ஸ்வராஜ்.

தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஒருசில நிறுவனங்கள் 2ஜி அலைக்கற்றை ஏலம் எடுக்க உதவினார் என்பதுதான் ஆ.ராசா மீதான குற்றச்சாட்டு. அதுதான் ஸ்பெக்ட்ரம் ஊழல். இதில் அரசுக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் இழப்புத் தொகை வேண்டுமானால் பெரிதாக இருக்கலாம். ஆனால், குற்றத்தின் தன்மை என்ற வகையில், ஆ.ராசா செய்ததைவிட, சுஷ்மாவும் வசுந்தராவும் செய்திருப்பது மிகப் பெரிய குற்றம். இந்திய சட்டப்படியே அதைவிட இதற்கு அதிக தண்டனை வழங்க முடியும்.

பாரதி தம்பி

கேள்வி 2: மத்தியப்பிரதேச மாநில அரசு ஊழியர்கள் தேர்வு வாரியமான 'வியாபம்' ஊழல் குறித்து இன்று இந்தியாவே பேசுகிறது. பணம் வாங்கிக்கொண்டு அரசுப் பணியிடங்களை நிரப்பிய வகையில், சுமார் 2 லட்சம் கோடி ரூபாய் ஊழல் நடந்திருப்பதாகவும், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இப்படி முறைகேடான வழிகளில் அரசுப் பணிகளில் இணைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. ஊழல் வெடித்து வெளியில் வர... 'வியாபம்' ஊழல் வழக்கு அம்பலமாகக் காரணமாக இருந்தவர்கள் பலரும் மர்மமாக இறக்கிறார்கள்.

கடந்த 13 ஆண்டுகளாக மத்தியப்பிரதேசத்தில் பா.ஜ.க ஆட்சிதான். எனில், 'வியாபம்' ஊழலுக்கான முழுப் பொறுப்பும் பா.ஜ.க-வையே சேரும். ஆனால், முதலமைச்சர் சிவ்ராஜ்சிங் சௌகான் வாய் திறக்க மறுக்கிறார். சுதந்திர இந்தியாவில் இதுவரை எத்தனையோ ஊழல்கள் நடந்திருக்கின்றன. அவை அனைத்தில் இருந்தும் வேறுபட்டு, 50-க்கும் மேற்பட்ட மனித உயிர்களைக் காவுவாங்கும் கொடூர ஊழலாக உருவெடுத் துள்ளது 'வியாபம்'.

கேள்வி 3: குஜராத்தைச் சேர்ந்த அதானி குழுமம், சில மாதங்களுக்கு முன்பு, ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்த் மாகாணத்தில், கார் மைக்கேல் நிலக்கரிச் சுரங்கத்தை ஏலம் எடுத்திருக்கிறது. (அந்தச் சுரங்கம், தங்களது பூர்வீக வாழ்விடங்களையும் இயற்கையையும் அழிப்பதாக ஆஸ்திரேலியாவின் பூர்வகுடிகள் அபராஜின்கள், அங்கு கடும் போராட்டங்களை நடத்திவருகிறார்கள்.) இந்தச் சுரங்கத்தை ஏலத்தில் வாங்குவதற்கு பாரத ஸ்டேட் வங்கி அதானி குழுமத்துக்கு 6,200 கோடி ரூபாய் கடன் வழங்கியிருக்கிறது. கடன் வழங்கப்பட்டபோது, அதானி நிறுவனத்தின் மொத்தக் கடன் 81,122

கோடி ரூபாய். ஊரெல்லாம் கடன்வாங்கி வைத்திருக்கும் ஓர் ஊதாரிக்கு நீங்கள் கடன் தருவீர்களா? ஆனால், மோடி அரசு தருகிறது. காரணம் அதானி, மோடியின் நண்பர். 2002~ம் ஆண்டு மோடி குஜராத் முதலமைச்சர் ஆனபோது அதானி குழுமத்தின் சொத்து மதிப்பு 3,741 கோடி ரூபாய். 2014~ம் ஆண்டில் சொத்து மதிப்பு 75,659 கோடி ரூபாய்.

சி.ஏ.ஜி எனப்படும் மத்தியத் தணிக்கைக் குழு அறிக்கையிலேயே, 'ரிலையன்ஸ், எஸ்ஸார், அதானி போன்ற பெரு முதலாளிகளுக்கு, குஜராத்தின் மோடி அரசு தேவைக்கு அதிகமாக சலுகைகள் வழங்கியிருக்கிறது' எனக் கூறப்பட்டுள்ளது. ''2012~ம் ஆண்டு குஜராத்தில் முந்த்ரா துறைமுகம் கட்டுவதற்காக அதானி குழுமத்துக்கு ஒரு சதுரமீட்டர் 1 ரூபாய் முதல் 32 ரூபாய் வரை, என்ற மிகக் குறைந்த விலையில் மொத்தம் 14,305 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தச் சலுகைகள், மோடி பிரதமரான பிறகும் தொடர்கிறது" என்கிறார் ஃப்ரண்ட்லைன் பத்திரிகை ஆசிரியர் விஜய் சங்கர்.

கேள்வி 4: பா.ஜ.க~வைச் சேர்ந்த முதலமைச்சர்கள், அமைச்சர்கள் மீதான எந்தக் குற்றச்சாட்டுக்கும் இதுவரை மோடி வாய் திறக்கவில்லை. எதிர்க்கட்சிகள் மற்றும் ஊடகங்களின் நச்சரிப்புத் தாங்க முடியாத நிலையை அடைந்தபோது, 'சுஷ்மாவும் வசுந்தரா ராஜேவும் ராஜினாமா செய்ய வேண்டும்' என்ற குரல் வந்தது. குரலுக்குச் சொந்தக்காரர், மோடி அல்ல சங் பரிவார் அமைப்பின் தலைமையில் இருக்கும் கோவிந்தாச்சார்யா. இதற்கு மேலும் வினையாற்றாமல் இருந்தால், அது பா.ஜ.க~வுக்கு எதிரான பொது எண்ணமாக உருவெடுக்கும் என்பதால், மோடியை ஓர் அதட்டு அதட்டிவைக்கிறார் அவர். வசதி உள்ளவர்கள் மானிய விலை காஸ் சிலிண்டரை விட்டுத் தர வேண்டும் என பிரசாரம் செய்கிறது மோடி அரசு. ஆனால், மோடி பதவியேற்ற முதல் ஒரு வருடத்தில், வெளிநாட்டுப் பயணத்துக்காகச் செலவிட்ட தொகை 317 கோடி ரூபாய். (மன்மோகன் சிங், 10 ஆண்டுகளில் வெளிநாடுகளுக்குச் சென்று வர செலவிட்ட தொகை 650 கோடி ரூபாய்!)

கேள்வி 5: பொருளாதார நிபுணர் ஜெயரஞ்சன் இந்த அரசின் பொருளாதாரக் கொள்கைகளை மதிப்பிடும் கோணம் முக்கியமானது. காங்கிரஸுக்கு மாற்று என தன்னைச் சொல்லிக்கொள்ளும் பா.ஜ.க., அதே குட்டையில் விழுவது ஏன் என்பதையும், அடிப்படைப் பொருளாதாரக் கொள்கைகள் ஒன்றாக இருக்கும்போது இவர்களால் மாற்றாக இருக்க முடியாது என்பதையும் தெளிவாக விளக்குகிறார்...

"காங்கிரஸாக இருந்தாலும், பா.ஜ.க-வாக இருந்தாலும் நாட்டில் தனியார் துறையின் பங்களிப்பை அதிகப்படுத்தினால் வேலைவாய்ப்பு பெருகும் என நினைக்கிறார்கள். ஆனால் தனியாருக்கு எவ்வளவு பணத்தைக் கொட்டிக்கொடுத்தாலும், அதன் மூலம் நாட்டின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்குமே தவிர, அது தொழில் முதலீடாக மாறி வேலைவாய்ப்பைப் பெருக்காது. ஒரு ரூபாய் முதலீட்டுக்கு எவ்வளவு வேலைவாய்ப்பு உருவாகும் என்பதற்கு ஒரு கணக்கு இருக்கிறது. 'எம்ப்ளாய்மென்ட் எலாஸ்ட்டிசிட்டி' என இதற்குப் பெயர். இந்தியத் தொழில் துறையில் இது, வரலாறு காணாத அளவில் மிகவும் குறைவாக இருக்கிறது. 1,000 கோடி ரூபாய் முதலீட்டுக்கு 500 வேலைவாய்ப்புகளைக்கூட உருவாக்க முடியவில்லை. நிலத்தின் மதிப்பு, இயந்திரச் செலவு இவையே பெரும் பகுதி முதலீட்டைத் தின்றுவிடுகின்றன. தமிழ்த் திரைப்படம் ஒன்றின் தயாரிப்பு மதிப்பு 50 கோடி ரூபாய் என்றால், 30 கோடி ரூபாய் கதாநாயகனின் சம்பளத்துக்கே போய்விடுவதைப் போன்றது இது. மேலும், உற்பத்தியைப் பெருக்க ஏராளமான இயந்திரங்கள் வந்துவிட்டன. சுமார் 500 தொழிலாளர்களை மட்டுமே வைத்து, ஒரு கார் தொழிற்சாலையை இயக்க முடியும். அப்படியே உருவாகும் வேலைவாய்ப்புகளிலும் சம்பளம் மிகமிகக் குறைவு.

7 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரைதான் சம்பளம். இன்று, சென்னை, டெல்லி, மும்பை... என எல்லா பெருநகரங்களிலும் குவிந்திருக்கும் தொழிலாளர்களின் சராசரி ஊதியம் இவ்வளவுதான். பிரமாண்டமான நிறுவனங்களாக இருந்தாலும் இதே நிலைதான். அவர்கள் ஊழியர்களை ஒப்பந்தக் கூலிகளாக எடுத்துக்கொள்கிறார்கள். 10 ஆயிரம் பேர் வேலைசெய்யும் தொழிற்சாலையில் வெறும் 1,000 பேர்தான் நிரந்தரத் தொழிலாளர்கள் மீதம் இருக்கும் 9,000 பேர் ஒப்பந்தத் தொழிலாளர்கள். இவர்களுக்கும் சம்பளம் அதே 10 ஆயிரத்தை ஒட்டிதான் இருக்கும். இதை மாற்றி அமைத்து தொழிலாளர் நலன்களை உறுதிப்படுத்தும் வேலைகளை அரசு செய்ய வேண்டும். மாறாக, ஏற்கெனவே இருக்கும் தொழிலாளர் நலச் சட்டங்களை மேலும் பலவீனப்படுத்தும் வேலையைத்தான் இந்த அரசு செய்கிறது. அடிப்படைப் பொருளாதாரக் கொள்கைகளை மாற்றி அமைப்பது ஒன்றுதான் இதற்கான தீர்வு. சிறுதொழில்களை ஊக்குவித்து வளர்த்து எடுக்காமல் 'மேக் இன் இந்தியா' எனப் பேசுவதால் என்ன பயன்? அது, தொழிலாளர்களின் உழைப்பை இன்னும் குறைந்த கூலிக்குச் சுரண்டுவதற்குதான் வழி வகுக்கும்!"

இதுதான் இந்தியாவை வளமான பாதையில் அழைத்துச் செல்லும் வியூகமா திரு.மோடி அவர்களே?!

**நன்றி: ஆனந்தவிகடன்**

**3ம் பக்கத்தொடர்ச்சி...**

பால் கடலைக் கடைந்து அமிர்தம் கொண்டு வா என்பாங்கள். ஆனா கடைசியிலை எதுவும் கிடைக்காமல் சாக்கடைத் தண்ணியை குடிச்சுக் கொண்டு காலம் தள்ளுவாங்கள்".

அந்தப் பெரியவரின் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை என்பதை சுமந்திரனின் சிங்களக் பத்திகைச் செவ்வி சொல்லாமல் சொல்கிறது.

**-புனிதன் (சுன்னாகம்)**


## அறிவித்தல்

**'வானவில்' இதழ் பிரதி மாதம் தோறும் 20ஆம் திகதி அளவில் வெளிவருவதால், அதில் பிரசுரிப்பதற்கென சமூக - கலாச்சார நிகழ்வுகள் பற்றிய அறிவித்தல்களை அனுப்புவோர், அவற்றை 10ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.**

**-நிர்வாக ஆசிரியர்-**

# 'நல்லாட்சி' நடக்கும் நாட்டிலே...

# ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்ல!




நியூயோர்க்கில் அமைந்திருக்கும் ஐ.நா. சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதிகள் குழு, இவ்வருடம் செப்ரெம்பரில் ஆரம்பாகவுள்ள பொதுச்சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்கவுள்ள மிகப்பெரிய (Jumbo) இலங்கைப் பிரதிநிதிகள் குழுவை வரவேற்கும் தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளது.

கடந்த காலங்களில் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில், அவரது ஐ.நா. மற்றும் வெளிநாட்டு விஜயங்களின்போது சுமார் 100 பேர் வரையிலானவர்களை அழைத்துச் சென்று, நாட்டு மக்களின் வரிப்பணத்தை வீணடித்ததாக ஐக்கிய தேசிய கட்சியும் இதர எதிர்க்கட்சிகளும் கடந்த காலங்களில் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வந்தன. ஆனால் 'நல்லாட்சி' செய்யப் போகிறோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த மைத்திரி – ரணில் கூட்டரசும் முன்னைய அரசின் அடிச்சுவட்டிலேயே பயணிப்பதை இவ்வருட இலங்கைக் குழுவின் ஐ.நா. பயண விபரம் நிரூபித்திருக்கிறது.

இலங்கைத் தூதுக்குழுவின் பின்வரும் பயண ஏற்பாடுகளைப் பார்த்து அந்த விபரத்தைத் தெரிந்து கொள்ள முடியும். இலங்கையின் ஐ.நாவுக்கான நிரந்தரத் தூதுக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அண்மையில் பின்வரும் விளம்பரம் வெளியாகி இருக்கிறது. அதன்படி பின்வரும் வாகனங்கள் இலங்கைக் குழு இவ்வருட ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்ற வரும்போது நியூயோர்க் நகரில் பயணிப்பதற்காக வாடகைக்கு கோரப்பட்டுள்ளன.

Luxury Sedans (Four seater/Black)Lincoln Sedans (Four seater/Black)

Bens Sedans (Four seater/Black)

SUVs Suburban (Seven seater/Black)

Passenger Van (14 seater)

Mini Vans (14 seater)

Cargo trucks/Vans and Mini Buses (15-20 seater and 50-75 seater)

இந்த வாகனங்கள் யாவும் 2012 ஆண்டுக்குப் பின்னர் தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும் எனவும் அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், அந்த வாகனங்களை ஓட்டுபவர்கள் மரியாதைக்குரிய நற்பண்புகள் உடையவர்களாகவும், ஆங்கிலம் நன்கு பேசத் தெரிந்தவர்களாகவும், நியூயோர்க் நகர் பற்றி நன்கு பரிச்சயம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அந்த வாகன ஓட்டுநர்கள் மரியாதைக்குரிய ஆடைகள் (Lounge Suit) அணிந்திருக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறு ஐ.நா. சென்ற இலங்கைத் தூதுக்குழுக்கள் தங்குவதற்காக நியூயோர்க் நகரில் உள்ள ஹில்டன் ஹோட்டல் (Hilton Hotel) தொடரணியின் 'முத்து' என வர்ணிக்கப்படும் Woldorf Astoria ஹோட்டல் உட்பட பல ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் வாடகைக்குப் பெறப்பட்டிருந்தன. அத்துடன் அவர்கள் பயணம் செய்வதற்கு செல்லிடத் தொலைபேசி இணைக்கப்பட்ட Limousine வாகனங்களும் வழங்கப்பட்டன. அவர்கள் இலங்கையிலுள்ள தமது குடும்பத்தினருடன் உரையாடிய கணக்கால் பெரும்தொகை கட்டணப் பணம் செலுத்தப்பட்டது. இந்த ஆடம்பரச் செலவுகள் யாவும் இலங்கை மக்களின் வரிப் பணத்திலிருந்தே செலவழிக்கப்பட்டன.

அவர்களில் சிலர் இலங்கை மக்களின் வரிப்பணத்தில் நீலப்படங்களையும் (Blue Films), வயது வந்தோருக்கான X படங்களையும் கூடப் பார்த்து மகிழ்ந்தனர்.

இந்த விபரங்களைக் கட்டுரையொன்றில் வெளியிட்டுள்ள கொழும்பிலிருந்து வெளியாகும் Sunday Times ஆங்கிலப் பத்திரிகை, நடைபெறும் ஏற்பாடுகளைக் கவனிக்கையில் இம்முறையும் இலங்கைத் தூதுக்குழுவில் 100 பேர் வரையில் இடம் பெறக்கூடிய சாத்தியங்கள் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது.

தூதுக்குழுவுக்குத் தலைமைதாங்கிச் செல்லும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐ.நா. பொதுச்சபை கூட்டத் தொடர் செப்ரெம்பர் 15ஆம் திகதி ஆரம்பமாகும் போது, அதில் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. *

# அழிந்து வரும் சீனப்பெருஞ்சுவர்!

*சீனப்பெருஞ்சுவர் உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும். வானத்தில் செயற்கைக்கோளில் அமர்ந்திருந்து பூமியில் பார்க்கக்கூடிய மனிதனின் ஒரேயொரு படைப்பு இந்த சீனப்பெருஞ்சுவர்தான். அப்படியான மகிமை வாய்ந்த சுவரின் 30 வீதமான பகுதி அண்மைய ஆண்டுகளில் காணாமல் போயிருக்கிறது.*

*இயற்கையால் ஏற்படும் சேதங்கள் ஒருபுறமிருக்க, புதிதாக வீடு கட்டும் சீனர்கள் ஒரு 'சென்டிமென்டுக்காக' சுவரில் இருந்து ஓரிரு கற்களைப் பிரித்தெடுத்து தமது வீடுகளில் பதித்து வருவதும் அழிவுக்கான ஒரு காரணம். அதனால் பெருஞ்சுவரைப் பாதுகாக்கும்படி யுனெஸ்கோ அமைப்பு சீனா அரசை வலியுறுத்தியுள்ளது.*

# உலக நாடுகளில் ஊதிய விபரம்

*அமெரிக்காவில் ஒரு மணித்தியால குறைந்தபட்சம் ஊதியம் 7.25 டொலர்களாக இருக்கையில் அந்நாட்டின் மிகப்பெரிய நகரமான நியூயோர்க், துரித உணவு நிலையங்களில் வேலை செய்வோரின் மணித்தியாலத்துக்கான சம்பளமாக 15 டொலர்களை உத்தரவாதம் செய்துள்ளது. உலக நாடுகள் சிலவற்றில் குறைந்தபட்ச மணித்தியால ஊதியம் வருமாறு:*

*அவுஸ்திரேலியா - 12.79 டொலர்கள்*
*இங்கிலாந்து - 10.13 டொலர்கள்*
*ஜேர்மனி - 9.33 டொலர்கள்*
*இஸ்ரேல் - 6.11 டொலர்கள்*
*ஹொங்கொங் - 4.19 டொலர்கள்*
*சிலோவாக்கியா - 2.39 டொலர்கள்*

*ஆதாரம்: 'ரைம்' சஞ்சிகை*




# 6 மாதத்தில் 100 தமிழ் திரைப்படங்கள்!

*தமிழகத்தில் இவ்வாண்டின் (2015) முதல் ஆறு மாதங்களில் 100 திரைப்படங்கள் வெளியாகி இருக்கின்றன. இது தமிழ் சினிமா வரலாற்றில் இதுவரை நடக்காத ஒன்று. ஆனாலும் இந்த 100 படங்களில் வெறுமனே 10 படங்கள் மட்டுமே வெற்றிகரமாக ஓடி வசூலை ஈட்டிக் கொடுத்திருக்கின்றன.*

# வட துருவ எண்ணெய் அகழ்வுக்காக போட்டி!

*அபரிமிதமான உண்ணெய் மற்றும் இயற்கை வாயு வளம் கொண்ட வட துருவ பனிப் பிரதேசத்தின் பல பகுதிகளுக்கு அதன் அண்டையில் உள்ள நாடுகள் உரிமை கோரியுள்ளன. அதன்படி-*

*கனடா 463,00 மைல்களையும்,*

*ரஸ்யா 463,000 மைல்களையும்,*

*டென்மார்க் 345,000 மைல்களையும் உரிமை கோரியுள்ளன.*

*அமெரிக்கா இன்னமும் உத்தியோகபூர்வமாக எதனையும் உரிமை கோரவில்லை எனினும் அதற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டு வருகின்றது. அதேவேளையில் அங்குள்ள* Svalbord *பிராந்தியத்தில் எண்ணெய் அகழ்வு செய்யும் முயற்சியில் இறங்கியுள்ள நோர்வே ரஸ்யாவுடன் சர்ச்சையில் இருக்கின்றது.*

# மூங்கில் இலை மேலே...

*மூங்கிலானது தொடர்ந்து வேரிலிருந்து கன்று தோன்றி வளர்ந்து பல தலைமுறை மூங்கில்களும் ஒரே புதராகக் காட்சியளிக்கும். எனவேதான் திருமண பந்தல்கால் நடும்போது மூங்கில் நட்ட பிறகுதான் எவ்விதமான பந்தலாக இருந்தாலும் அதை அமைப்பது வழக்கமாக உள்ளது.*

*40 ஆண்டுகளுக்கு மேல் வளர்ந்த முதிர்ந்த மூங்கில் மரங்களில் மூங்கில் நெல் விளையும். மூங்கில் அரிசியை மற்ற சாதாரண அரிசியைப் போல் எந்த வடிவத்திலும் விருப்பத்துக்கு ஏற்ப சமைத்துச் சாப்பிடலாம். இதைச் சாப்பிடுவதால் உடலில் சர்க்கரை அளவு குறையும். நோய் எதிர்ப்புச் சக்தி கூடும். உடல் பருமன் ஆவதைக் கட்டுப்படுத்தும். பல அரிய மருத்துவக் குணங்கள் உள்ளதால் முழுமையான திடத்தைத் தரும் அரிய அரிசியாக இது திகழ்கிறது. இயற்கையாகக் கிடைக்கும் மூங்கில் அரிசியை எந்த வயதினரும் சாப்பிடலாம்.*

*மூங்கில் இலைகளைச் சிறிது தண்ணீர் தெளித்து இடித்துச் சாறு பிழிந்து அத்துடன் சிறிது தேன் கலந்து காலை மாலை பருகினால் தொடர் இருமல் தீரும். காய்ந்து கிடக்கும் மூங்கில் இலையை எரித்துச் சாம்பலாக்கிப் புண்களின் மீது தடவ அவை விரைந்து ஆறும். கடல் உப்பு கேள்விப் பட்டிருக்கிறோம். பாறை உப்பு கேள்விப்பட்டிருக்கிறோம். மூங்கில் கணுக்களிலிருந்து கூட உப்பு பெறப்படுகிறது தெரியுமா? இந்த மூங்கில் உப்பை 5 கிராம் அளவில் நாள்தோறும் பயன்படுத்தி வந்தால் இதயப் படபடப்பு. தலைச்சுற்றல், வயிற்றுப்புண், பித்தவாந்தி குணம் பெறும். தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் இதயம், வயிறு, கல்லீரல் வலிமை பெறும்.*

*-தென்றல் மதுசூதனன் (கல்கி)*

## இதுதான் பாராளுமன்றம்!

பாராளுமன்றத்துக்கான ஆங்கிலச் சொல்லான 'பார்லிமென்ட்' எப்படி வந்தது என்று தெரியுமா? 'பார்லிம்' எனும் லத்தீன் மொழிச் சொல்லுக்கு 'கூடிப்பேசும் இடம்' என்று அர்த்தம். அமைச்சர்கள் பலரும் கூடிப்பேசும் இடம் என்பதால், பாராளுமன்றத்துக்கு 'பார்லிமென்ட்' என்ற பெயர் உருவானது.

## காற்றுக்கென்ன வேலி?

தென்றல் காற்று மணிக்கு சுமார் 6 மைல் வேகத்தில் வீசுகிறது. சாதாரண காற்று மணிக்கு 12 மைல் வேகத்தில் வீசுகிறது. கடுமையான காற்று மணிக்கு சுமார் 20 மைல் வேகத்தில் வீசுகிறது. புயல் காற்று மணிக்கு சுமார் 40 மைல் வேகத்தில் வீசுகிறது. சூறாவளிக் காற்று மணிக்கு சுமார் 60 மைல் வேகத்தில் வீசுகிறது.

## பட்டினிக் கொடுமை!

உலகில் 80 கோடி மக்கள் (மொத்த சனத்தொகை 700 கோடி) ஒவ்வொரு இரவும் உண்ண உணவின்றி வெறும் வயிற்றுடன் படுக்கச் செல்கின்றனர்.

## கேழ்வரகு (குரக்கன்)

கேழ்வரகில் கல்சியம், இரும்புச் சத்து அதிகம் உள்ளன. பாலில் உள்ள கல்சியத்தைவிட இதில் அதிகம் உள்ளது. கேழ்வரகை வாரம் இருமுறையாவது சேர்த்தால் உடல் வலுப்பெறும். நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

குழந்தைகளுக்கு கேழ்வரகு மாவுடன் பால், வெல்லம் சேர்த்து கூழ் காய்ச்சிக் கொடுக்கலாம். இது குழந்தை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. தினமும் கேழ்வரகு கூழ் சாப்பிட்டு வர குடற்புண் குணமடையும். கேழ்வரகில் உள்ள நார்ச்சத்துக்கள் மலச்சிக்கலைத் தடுக்கிறது. கேழ்வரகு நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் சிறந்த உணவாகும். இதில் இரும்புச் சத்து அதிகம் இருப்பதால் இரத்தச்சோகை நோய் வராமல் தடுக்கிறது. கர்ப்பிணிப் பெண்கள் தினமும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். கேழ்வரகு செரிமானமாவதில் எளிதானது. கோதுமையில் இருக்கும் க்ளுட்டன் என்னும் பசை வகை புரதம் போல இந்தத் தானியத்தில் இல்லை. கேழ்வரகு உண்பதை வழக்கமாக வைத்துக் கொண்டால், ஊட்டச்சத்துக் குறைபாடுகள் இல்லாத வாழ்க்கையை வாழலாம்.

## 1000 மேடை நாடகங்களும், 1500 திரைப் படங்களும்!

தமிழக திரை உலகின் 100 வருட வரலாற்றில், எத்தனை எத்தனையோ நகைச்சுவை நடிகர்களும் நடிகைகளும் வந்துபோய் விட்டார்கள். அவர்களில் இன்றும் உயிர் வாழ்பவர் நடிகை மனோரமா. 72 வருடங்களாக நடிப்புலகில் வலம் வரும் மனோரமா, இதுவரை நாடகங்களுக்காக 1000 தடவைகள் மேடையேறி இருக்கிறார்! அதேபோல, 1500 திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார்!! அதுமாத்திரமல்ல, அண்ணாத்துரை, கருணாநிதி, எம்.ஜீ.இராமச்சந்திரன், அவரது மனைவி ஜானகி, ஜெயலலிதா என 5 முதலமைச்சர்களுடனும் சேர்ந்து நடித்த பெருமையும் அவருக்கு உண்டு.

## மனித உடலில் நுண்ணுயிர்கள்

மனித உடலே ஒரு இயற்கையின் ஆச்சரியம் தானே, பல்வேறுபட்ட உடலுறுப்புக்களை கொண்டுள்ள இந்த மனித உடலில், பத்தாயிரம் வகைக்கும் மேற்பட்ட பில்லியன் கணக்கான நுண்ணுயிர்கள் வாழுகின்றன.

## 600 நாவல்கள் எழுதிய எழுத்தாளர்!

கோட்டயம் புஸ்பநாத் என்ற மலையாள எழுத்தாளர் இதுவரை சுமார் 600 நாவல்களை எழுதிக் குவித்திருக்கிறார். இந்தளவு நாவல்களை இந்தியாவில் வேறு யாராவது எழுதி இருப்பார்களோ தெரியாது. இவரது நாவல்களை வாசிப்பதற்கென கேரளாவில் பல இலட்சம் வாசகர்கள் காத்துக் கிடக்கின்றனர். தமிழ்நாட்டிலும் பல்லாயிரம் வாசகர்கள் அவருக்கு உண்டு.

சில வேளைகளில் அவரது தொடர் கதைகள் ஒரே நேரத்தில் 5 - 6 வார, மாத இதழ்களில் வெளிவருவதும் உண்டு. அப்படி அவரது எழுத்தில் என்ன சுவாரஸ்யம் இருக்கிறது என்று சிலர் எண்ணலாம். அவரது நாவல்கள் அத்தனையும் மாஜா ஜால, மந்திர தந்திரக் கதைகள். எல்லாமே கற்பனை. நிஜம் கிடையாது.

மனிதர்களுக்கு நிஜத்தை விட, நிழல்தான் விருப்பம் போல!

## 10 இலட்சம் தமிழக மீனவர்களின் தலைவிதி

தமிழகத்தில் பழவேற்காடு தொடங்கி குமரி மாவட்டத்தின் நீரோடி வரை 1078 கிலோமீட்டர் நீளமான கடற்கரை இருக்கிறது. இந்தக் கரையில் வாழும் 10 இலட்சம் மக்கள் கடல்படு திரவியங்களை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். இங்கு மீனவர் என்பவர்கள் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. பல சாதிகளையும், பல மதங்களையும் சேர்ந்தவர்கள் இந்த மீனவர்களில் அடங்குவர். இவர்களது வாழ்க்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாத தமிழக – மத்திய அரசுகள், இவர்களது எதிரியாக இலங்கையைச் சித்தரிப்பதில் வெற்றி கண்டு வருகின்றன.

# எதிர்க்கட்சியின் எதிர்க்கட்சித் தலைலவர் ஆனார் சம்பந்தன்!




இவ்வருடம் ஓகஸ்ட் 17ஆம் திகதி தெரிவான புதிய பாராளுமன்றத்தில் 16 உறுப்பினர்களை மட்டும் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகி இருக்கிறார்.

அவரது தெரிவை நோக்கும் போது 1977இல் இதேபோன்றதொரு சந்தர்ப்பத்தில், அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகிய போது, யாழ்ப்பாணத்தின் சிறந்த கல்விமான்களில் ஒருவரும், சொல்லிலும் செயலிலும் உண்மையானதொரு கொம்யூனிஸ்ட்டாக வாழ்ந்தவருமான **மு.கார்த்திகேசன் மாஸ்ரர்** சொன்ன ஒரு நகைச்சுவை கலந்த வாக்கியம்தான் ஞாபகத்துக்கு வருகிறது.

அவர் சொன்னது இதுதான்:

"ஓம்...ஓம்.. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவர்தான். ஆனால் ஒரு சிறு திருத்தம். அதாவது அவர் எதிர்க்கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர்!"

தோழர் கார்த்திகேசனின் இந்த வார்த்தைகள் வெறும் நகைச்சுவை வசனங்கள் அல்ல. தமிழ் தலைமைகள் ஆரம்ப காலம் தொடக்கம் பின்பற்றி வந்த ஐக்கிய தேசியக் கட்சி சார்புப் போக்கை அவதானித்தும், அதற்கு எதிராகக் களத்தில் நின்று வேலை செய்தும் வந்ததின் அனுபவ வெளிப்பாடே அவரது அந்த வார்த்தைகள்.

ஏனெனில் தமிழர்களின் முதலாவது அரசியல் கட்சியான தமிழ் காங்கிரஸ், சுதந்திர இலங்கையின் முதலாவது அரசை அமைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் அப்போதைய தலைவர் டி.எஸ்.சேனநாயக்கவின் அரசில் சேர்ந்தது மாத்திரமின்றி, அக்கட்சியின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அமைச்சராகவும் பதவி வகித்தார். அவர் அங்கம் வகித்த அந்த ஐ.தே.க. அரசுதான், வடக்கு கிழக்கில் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்ததுடன், மலையக இந்திய வம்சாவழித் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்தெடுத்தது.

ஐ.தே.க. அரசின் தீர்மானங்களை பொன்னம்பலம் ஆதரித்ததிற்காக அந்தக் கட்சியை விட்டு வெளியேறிய எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் அவரது சகாக்களும், பின்னர் தமிழரசுக் கட்சியை உருவாக்கினர். ஆனால் சிறிது காலத்திலேயே அந்தக் கட்சியும் பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரசின் பாதையிலேயே பயணிக்க ஆரம்பித்தது. இறுதியில் 1965இல் டட்லி சேனநாயக்க தலைமையில் ஐ.தே.கவின் ஏழு கட்சி கூட்டரசாங்கம் அமைந்தபோது, இந்த இரு தமிழ் கட்சிகளும் அந்த அரசில் இணைந்து மந்திரிப் பதவியும், உப சபாநாயகர் பதவியும் பெற்றுக் கொண்டனர்.

**அரசியல் நிருபர்**

ஆனால் அதற்கு முதல், 1960இல் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசு அமைந்தபோது, இதே கட்சிகள்தான் தமிழர் உரிமைப் போராட்டம் என்ற பெயரில் 1961இல் வடக்கு கிழக்கில் சத்தியாக்கிரகம் ஒன்றை ஆரம்பித்து அரச நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்தவர்கள். சிறீமாவோ அரசை மூர்க்கமாக எதிர்த்தவர்கள், ஐ.தே.க. அரசு அமைந்தபோது அதில் பங்காளிகளாகிவிட்டனர்.

1965இல் ஐ.தே.க. அரசில் இணைந்ததின் காரணமாக 1970 பொதுத் தேர்தலில் இந்த இரு தமிழ் கட்சிகளினதும் தலைவர்கள் மண் கவ்வினர். அதைத் தொடர்ந்து, பழையபடி வேதாளம் முருக்கை மரத்தில் ஏறிய கதையாக, 1970 முதல் 1977 வரை சிறீமாவோ தலைமையில் அமைந்த மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கெதிராக பல சட்ட மறுப்புப் போராட்டங்களை தமிழரசுக் கட்சி நடாத்தியது. அதன் தொடர்ச்சியாக, சிறீமாவோ அரசை எதிர்ப்பதற்காக தமிழரசும் தமிழ் காங்கிரசும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கியதுடன், 1976இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி,

'இனிமேல் தமிழர் பிரச்சினைக்கு தனித்தமிழ் ஈழம் அமைப்பது ஒன்றே தீர்வு' எனத் தீர்மானமும் நிறைவேற்றினர். அந்த புதிய கூட்டணியின் தலைமையிலும் பல சட்ட மறுப்புப் போராட்டங்களை நடாத்தியதுடன், தமிழ் இளைஞர்களையும் ஆயுதம் தாங்கிய வன்முறைப் பாதையில் தூண்டி விட்டனர்.

1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிறீமாவோ தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி தோல்வி காண, ஐ.தே.க. அமோக வெற்றி பெற்றது. மறுபக்கத்தில்

தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்கில் உள்ள 18 தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. அப்பொழுது, பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த விகிதாசாரத் தேர்தல் முறை இல்லாதபடியால், 24 இலட்சம் வாக்குகள் பெற்ற சிறீ.ல.சு.கட்சி பாராளுமன்றத்தில் 8 ஆசனங்கள் மட்டும் பெற்று எதிர்க்கட்சி அந்தஸ்து கூடப் பெறாமல் போக, தனித்துப் போட்டியிட்ட இடதுசாரிகளின் கூட்டணி 5 இலட்சம் வாக்குகள் பெற்றும் ஆசனங்கள் எதுவும் பெறாமல் போக, மூன்றரை இலட்சம் வாக்குகள் மட்டும் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி 18 உறுப்பினர்களுடன் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றது!

வாக்குகளின் எண்ணிக்கை என்ற ஜனநாயக அடிப்படையில் பார்த்தால், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிர்க்கட்சி அந்தஸ்துக் கிடைத்தது ஒரு ஜனநாயகக் கேலிக்கூத்து என்றாலும், பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ற சம்பிரதாய மற்றும் சட்ட அடிப்படையில் பார்க்கையில் அதில் நியாயமும் உண்டு.

அந்தக் கட்டத்தில்தான் தோழர் கார்த்திகேசன் அ.அமிர்தலிங்கத்தின் பதவியை 'எதிர்க்கட்சியின் எதிர்க்கட்சித் தலைவர்' என வர்ணித்தார். அவர் அந்தக் கருத்தை, கடந்த காலத்தில் தமிழ் கட்சிகள் பின்பற்றிய ஐ.தே.க. ஆதரவு, சிறீ.ல.சு.க. எதிர்ப்பு என்ற நிலைப்பாட்டை அடிப்படையாக வைத்தே கூறியிருந்தார். ஆனால் 1977 ஒகஸ்டில் தேர்தல் நடைபெற்ற சிறிது நாட்களில், அதாவது செப்ரெம்பரில் கார்த்திகேசன் மரணித்து விட்டார். ஆனால் அவர் சொன்னபடியே பின்னரும் தமிழ் தலைமை ஐ.தே.கவுக்குச் சாதகமாகவே செயல்பட்டது.

வட்டுக்கோட்டையில் தனித்தமிழ் ஈழத் தீர்மானம் நிறைவேற்றியவர்கள், அதைச் சடுதியாகக் கைவிட்டு, ஜே.ஆர். அரசு முன்மொழிந்த உப்புச்சப்பு இல்லாத மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்றுக் கொண்டனர். தமிழ்த் தலைமையின் இந்தத் துரோகச் செயலை எதிர்பார்க்காத தமிழ் இளைஞர்கள், அதன் பின்னரே ஆளுக்கொரு இயக்கத்தை உருவாக்கி, தமிழர் விடுதலைக் கூட்டணி முன்மொழிந்த தமிழ் ஈழத்துக்காக ஆயுதம் தாங்கிப் போராட ஆரம்பித்தனர். அதன் பின்னராக, 30 வருடங்களாக தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாரிய அழிவுகள் குறித்து இங்கு விபரிக்கத் தேவையில்லை.

இறுதியாக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் அமைந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம், பாரிய விலை கொடுத்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, தொடர் அழிவுகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தது.

இப்பொழுது வரலாறு மீண்டும் ஒரு சுற்றுச் சுற்றி, பழைய நிலைக்கு வந்துள்ளது. ஐ.தே.க. மீண்டும் ஆட்சிபீடம் ஏறியுள்ளது. 47 இலட்சம் வாக்குகளையும், 95 பாராளுமன்ற உறுப்பினர்களையும் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்திருந்தும், எதிர்க்கட்சி அந்தஸ்து பெற முடியாமல் அரசியல் சூழ்ச்சியால் தடுக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில், சில இலட்சம் வாக்குகளையும், வெறுமனே 16 பாராளுமன்ற உறுப்பினர்களையும் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்கப்பட்டு, இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகி உள்ளார். 1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சி அந்தஸ்துப் பெற்றதுடன் ஒப்பிடுகையில், இன்று சம்பந்தன் அந்தப் பதவியைப் பெற்றது அரசியல் ரீதியில் மட்டுமின்றி, எண்ணிக்கை ரீதியிலும் திட்டமிட்ட, ஒரு வெட்கக்கேடான ஜனநாயகப் படுகொலையாகும்.




சம்பந்தனும் தனது முன்னைய சகாக்களை போலவே ஐ.தே.க அரசின் சகபாடியாகத்தான் செயல்படுவார் என்பதற்கான தெளிவான சமிக்ஞைகள் ஏற்கெனவே தெரிய ஆரம்பித்துவிட்டன. எதிரணியின் பொதுவேட்பாளராக மைத்திபால சிறிசேன களமிறங்கிய போது, ஐ.தே.க., ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற கட்சிகளுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அவரை ஆதரித்து வெற்றிபெற வைத்தது. மைத்திரியின் ஆட்சியில் 2016இல் தமிழர் பிரச்சினை நிச்சயம் தீர்க்கப்படும் என்றும் சம்பந்தன் அடித்துக் கூறினார். ஐ.தே.க. அரசு அமைந்தால், அவ்வரசை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கும் என சம்பந்தனும், கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கூறியும் உள்ளனர்.

எனவே, சம்பந்தன் தனிப்பட்ட முறையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும், அவரும் அவரது கட்சியும் ஐ.தே.க. அரசின் பங்காளிகளாகத்தான் இருக்கப் போகிறார்கள். எப்படி 1977இல் ஜே.ஆரின் ஐ.தே.க. அரசும், அமிர்தலிங்கத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒரு பக்கத்தில் கூடிக்குலாவிக் கொண்டு, தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்காமல் அதை யுத்தமாக மாற்றினார்களோ, அதேபோன்றதொரு நிலைமைதான் இன்றும் உருவாகியுள்ளது.

அதாவது, மைத்திரி — ரணில் அரசு ஒருபக்கத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் கூடிக்குலாவிக் கொண்டு, மறுபக்கத்தில் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை குப்பைக் கூடைக்குள் வீசியெறிந்து விடுவார்கள். அதன் மூலம் தமிழ் தலைமையின் துரோகம் மீண்டுமொருமுறை வரலாற்றில் அரங்கேறி, தமிழ் தேசியவாத சக்திகள் மீண்டும் புதிய வடிவிலான போராட்டத்தில் ஈடுபடும் சூழல் உருவாகும்.

எதுஎப்படியோ, சம்பந்தனுக்கு ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்துவிட்டது. அதன் மூலம் ஏகாதிபத்தியத்துக்குச் சார்பான எல்லாக் கிரகங்களும், அதாவது ஜனாதிபதி மைத்திபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் என எல்லோரும் ஒரே நேர்கோட்டில் வந்துள்ளனர். இப்பொழுது நாட்டில் அரசுக்கு எதிரான உண்மையான எதிர்க்கட்சி எதுவும் பாராளுமன்றத்தில் இல்லை. ஜனாதிபதியும், ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் ஒரே ஆட்களாகவே இருக்கின்றனர். அதாவது, இந்த நிலையைப் பார்க்கும் போது, 'திருவிளையாடல்' என்ற சினிமா படத்தில் இடம் 'பாட்டும் நானே பாவமும் நானே' என்ற பாடல் வரிகள்தான் ஞாபகத்துக்கு வருகிறது.

**எனவேதான், நாமும் தோழர் மு.கார்த்திகேசன் சொன்னதை எதிரொலித்துச் சொல்கிறோம், 'ஓம்...ஓம்... சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர்தான், ஆனால் எதிர்க்கட்சியின் எதிர்க்கட்சித் தலைவர்'.**

**வரலாறு இந்த உண்மையை மீண்டுமொருமுறை நிச்சயம் நிரூபிக்கும்.**
*

## பார்வைகள்: 1

# சீனாவுடனான உறவை இலங்கை அவசியம் பேண வேண்டும்! - முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேக

"இலங்கையில் தமிழ் புலி கிளர்ச்சியாளர்களுடன் நடைபெற்ற 30 வருட உள்நாட்டுப் போரை 2009 மே மாதத்தில் முடிவுக்குக் கொண்டு வருவதில் சீனா உறுதியான ஆதரவை வழங்கியதால், அந்நாட்டுடனான நெருங்கிய உறவை இலங்கை அவசியம் தொடர்ந்து பேண வேண்டும்" என புலிகளுடனான இறுதிப் போருக்குத் தலைமைதாங்கிய இலங்கை இராணுவத்தின் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேக கூறியிருக்கிறார்.

அண்மையில் சீனாவின் உத்தியோகபூர்வ 'சின்குவா' (Xinhua) செய்தி ஸ்தாபனத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே பொன்சேக இவ்வாறு கூறியிருக்கிறார். அவர் தொடர்ந்து அந்தச் செவ்வியில் கூறியிருப்பதாவது:

"அடிப்படையில் பார்த்தால் சீனாவின் உதவியின்றேல் புலிகளுக்கு எதிரான இந்த யுத்தத்தை எம்மால் முடிவுக்குக் கொண்டு வந்திருக்கவே முடியாது. சீனா இலங்கையின் நீண்டகால, உறுதிமிக்க நட்பு நாடாகும். சீனா நமது நாட்டுக்குச் செய்த உதவிகளை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே அந்த நாட்டுடனான உறவை அவசியம் பேண வேண்டும் என்பதே எனது கருத்தாகும்."

இரண்டாம் உலக யுத்த காலத்தில் சீனாவின் யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்ட வெற்றியின் 70ஆவது ஆண்டை நினைவுகூர்ந்த பொன்சேக,

"இரண்டாம் உலக யுத்த முடிவில் சுதந்திர சீனா தனது வளர்ச்சியின் கூடாக உலக நாடுகளுடன் பரந்தளவிலான தொடர்புகளை ஏற்படுத்தி, உலக சமாதானத்துக்கு பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. நாங்கள் சீனாவின் வரலாற்று ரீதியிலான சாதனைகளையும், தற்போது அந்த நாடு அடைந்துள்ள சாதனைகளையும் பாராட்டுகிறோம். சீன இராணுவம் மகத்தானதொரு வரலாற்றைக் கொண்டிருப்பதுடன், இன்றைய உலகில் பலம் வாய்ந்த ஒரு சக்தியாகவும், உலக ரீதியிலான தாக்கத்தை உண்டு பண்ணக்கூடிய ஒன்றாகவும் இருக்கின்றது." என்று கூறினார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

"இலங்கை உலக நாடுகளுடனான உறவில் அணிசேராக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. ஆனால் பிராந்தியத்தின் ஸ்திரப்பாட்டையும் நாம் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. இந்தப் பிராந்தியத்திலுள்ள எல்லா நாடுகளுடனும் நாம் சமாதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பிராந்தியத்திலுள்ள நாடுகளின் செயல்திறனையும், நிலைப்பாடுகளையும் நாம் இனங்காண வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

**குறிப்பு:** பொன்சேக இந்தச் செவ்வியில் தெரிவித்துள்ள கருத்துக்கள் இலங்கையின் இன்றைய மைத்திரி – ரணில் அரசின் சீன விரோத, மேற்கத்தைய சார்புப் போக்கை மறைமுகமாக விமர்சின்றது என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். *

## பார்வைகள்: 2

# இந்திய – இலங்கை உறவுகள் முன்னெப்போதையையும் விட சிறப்பாக உள்ளன! – இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர்

"இந்திய – இலங்கை உறவுகள் இப்பொழுது முன்னெப்போதையையும் விட பலமானதொரு அத்திவாரத்தில் அமைந்து வளர்ச்சி கண்டிருப்பதுடன், இலங்கை இந்தப் பிராந்தியத்தின் வளர்ச்சியில் இன்றியமையாத ஒரு அங்கமாகவும் திகழ்கின்றது" என்று கொழும்பில் உள்ள கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற 'பாதுகாப்பு கருத்தரங்கு – 2015' என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்தியாவின் பிரதி தேசிய பாதுகாப்பு பிரதி ஆலோசகர் டாக்டர் அரவிந் குப்தா (Dr.Aravind Gupta) கூறினார்.

'ஒரு தேசத்தின் தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் பயமுறுத்தல்களின் தன்மை' என்ற தொனிப்பொருளில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கின் முதலாவது அமர்வில் பங்குபற்றிய டாக்டர் குப்தாவின் உரை, 1. பொருளாதார வல்லாண்மைகளின் பங்கு, 2. பாதுகாப்புச் சீர்திருத்தங்கள், 3. பயங்கரவாதம், 4. வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரம், 5. வளங்களுக்கான போட்டி, என்ற ஐந்து விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

"தற்போது உருவாகியுள்ள நிலைமைகளைக் கணக்கில் எடுத்தால், வளர்ந்து வரும் பொருளாதார வல்லாண்மைச் சக்திகளை தாக்கமுள்ளதாக சீர்திருத்தம் செய்ய வேண்டியதின் அவசியத்தை உணர முடியும். அதேவேளை, எமது பொருளாதாரங்களைப் பாதுகாக்கவும், இந்து சமுத்திரத்தின் ஸ்திரத்

தன்மையைப் பேணவும், கடற்கொள்ளை போன்ற சம்பந்தமான கடற் பாதுகாப்பு, தகவல் பரிவர்த்தனைப் பாதுகாப்பு போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

அதேநேரத்தில், பயங்கரவாதம் இன்னமும் ஒரு பெரும் சவாலாகவே இருக்கின்றது. இளம் வயதினர் இணையத்தள முறைமைகளின் ஊடாக மேலும் மேலும் தீவிரமயப்படுத்தப்பட்டு வருகின்றனர். எனவே பயங்கரவாதத்தின் வழிமுறைகளை சரியான முறையில் கையாள்வதற்கு நாடுகளின் எல்லைகளுக்கு இடையில் ஒன்றுபட்ட தயார் நிலையையும், விழிப்புணர்வையும் பலப்படுத்த வேண்டும்.

பங்குச் சந்தை வீழ்ச்சி, பொருளாதார நெருக்கடி என்பன எங்கும் வியாபித்திருக்கையிலும், ஆசியா பெருமளவு பொருளாதார வளர்ச்சியைக் கண்டுள்ளது. ஆனால் தண்ணீர்ப் பிரச்சினை பொருளாதார வளர்ச்சியை இன்னொரு சவாலுக்கு இட்டுச் சென்றுள்ளது. வருங்காலத்தில் மேலும் பல நெருக்கடிகள் உருவாகாலாம் என எதிர்பார்க்கப்படுவதால், ஒத்துழைப்பின் தேவை வேகமாக அதிகரித்து வருகின்றது.

இலங்கை ஜனாதிபதியின் இந்திய வருகையும், இந்தியப் பிரதமரின் இலங்கை வருகையும், இலங்கை – இந்திய உறவுகளை மேலும் பலப்படுத்த உதவியுள்ளது."

**குறிப்பு:** இந்த வருடம் ஜனவரி 8ஆம் திகதி மேற்கத்தைய சக்திகளினதும், இந்தியாவினதும் மறைமுகப் பின்னணியில் இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றம் நிகழ்த்தப்பட்ட பின்னர், இந்தியாவுடன் மைத்திரி – ரணில் அரசின் உறவு அதிகரித்து வருவதையே டாக்டர் குப்தாவின் உரை கட்டியம் கூறுகிறது. *

## பார்வைகள்: 3 இலங்கையின் தேர்தல் முடிவுகள் உலக முக்கியத்துவம் வாய்ந்தவை! – அமெரிக்க முன்னாள் பாதுகாப்பு பணிப்பாளர்

"இலங்கையின் தேர்தல் முடிவு பிராந்தியத்துக்கும் உலகத்துக்கும் முக்கியமானது" எனத் தெரிவித்திருக்கிறார் அமெரிக்காவின் முன்னாள் கடற்படை அட்மிரலும், தேசிய புலனாய்வகத்தின் முன்னாள் பணிப்பாளருமான டெனிஸ் குடலெர் பிளெயர் (Dennis Cutler Blair).

இது சம்பந்தமாக அவர் விடுத்திருக்கம் ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"ஜனவரியில் நடைபெற்ற தேர்தலில் பெரும்பாலான அவதானிகள் ஆச்சரியப்படும் அளவுக்கு தெரிவான ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவின் சீர்திருத்த நடவடிக்கைகள் ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலிலேயே தங்கியிருக்கிறது.

இலங்கையினதும், மியன்மாரினதும் (பர்மா) தேர்தல் முடிவுகள் பிராந்தியத்துக்கும், உலகத்துக்கும் முக்கியமானவை. வேகமாக வளர்ச்சி அடைந்துவரும் இந்தப் பிராந்தியத்தில், இரு நாடுகளும் தெற்கு மற்றும் தென் கிழக்காசியாவுக்கான முக்கியமான போக்குவரத்து மையத்தில் உள்ளன. அவைகளுடைய தேசிய வருவாய் வளர்ச்சி 6 வீதத்திற்கு மேல் இருப்பதால், அவை அரசியல் ஏகாந்த நிலையிலிருந்து விடுபட்டால், இலாபமீட்டக்கூடிய முதலீட்டு வாய்ப்புக்கள் ஏற்படும். ஒரு காலத்தில் எதேச்சாதிகாரத்தையும், மத்திப்படுத்தப்பட்ட பொருளாதார முறைமைகளையும் மேலானது என்று இருந்த நிலையில், குறிப்பிடக்கூடிய மிகவும் முக்கியமானமானது என்னவெனில், எதிர்காலத்தில் அவை ஜனநாயகத்தையும், திறந்த சந்தை முறையையும் கொண்டிருக்க வேண்டும் என்பதே.

இலங்கையின் இரு தரப்புகளும் வளைந்து கொடுக்காத வித்தியாசமான தரப்புகள். மகிந்த ராஜபக்ச 10 வருடங்கள் ஜனாதிபதியாக இருந்துள்ளார். 2009இல் அவரது படைகள், நீண்டதும் தவறானபாதையைக் கொண்டதுமான தமிழ் கிளர்ச்சியை இறுதியாக அழித்தொழித்தன.

உள்நாட்டு சக்திகளே இலங்கையினதும், மியன்மாரினதும் எதிர்காலத்தைத் தீர்மானிப்பவை. மிக முக்கியமானது என்னவெனில், பரந்தளவு சுதந்திரமானதும், நீதியானதுமான செயல்களின் மூலம் அவர்களுடைய தேர்தல்களில் பெறப்படப்போகும் நம்பிக்கையளிக்கும் முடிவுகளாகும். பல்வேறு குழுத் தலைவர்களுக்கிடையில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான இணக்கப்பாடுகளே, இந்த இரு நாடுகளினதும் அடுத்த கட்ட ஜனநாயக சீர்திருத்தங்களின் வடிவத்தையும், வேகத்தையும் தீர்மானிப்பதில் தீர்க்கமான பங்கு வகிப்பவை.

வேறு நாடுகள் குறுகிய காலத்திலும் நீண்ட எதிர்காலத்திலும் மியன்மார் மீதும், இலங்கை மீதும் தாக்கம் செலுத்தும். சீனா அண்மைய வருடங்களில் பெரும் கட்டடங்களையும், பெரும் பொருளாதாரத் திட்டங்களையும் மற்றும் இராணுவ நடவடிக்கைகளையும் – இலங்கைக்கு நீர்மூழ்கிகளின் விஜயம், மியன்மாருக்கு ஆயுத விற்பனையும், பயிற்சி குழுக்களை அனுப்பியமையும் – இந்த இரு நாடுகளுக்கும் செய்திருக்கிறது. பொருளாதார நன்கொடைகள் பொதுவாக வரவேற்புக்குரியவை. ஆனால் இந்த இரு நாடுகளும் நம்பிக்கையீனம், பீய்ஜிங்கின் செல்வாக்கு மற்றும் நோக்கம் காரணமாகவும், முன்னைய எதேச்சாதிகார அரசுகளுடன்

சீனாவின் நெருக்கம் அடையாளம் காணப்பட்டதாலும், இந்த இரு நாடுகளிலும் சீனாவினால் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த இரு நாடுகளுடனும் அமெரிக்காவின் பரஸ்பர உறவுகளைப் பொறுத்தவரையில் தெளிவாகச் சொல்வதானால், தேர்தல் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதிலும், சிறுபான்மை இனங்களுடனான தேசிய இணக்கப்பாட்டின் வளர்ச்சிலுமே அது தங்கியிருக்கிறது.

இலங்கை மீதான அக்கறை சற்று குறைவாக இருந்தது. கூடுதலான அடக்குமுறைத் தன்மையுள்ள ராஜபக்சவின் ஆட்சியை விட சிறிசேனவின் தெரிவை அமெரிக்கா வரவேற்றுள்ளதுடன், இலங்கையுடன் சந்தோசமான உறவுகளைக் கொண்டுள்ளது. மே மாதத்தில் இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி இலங்கைக்கு விஜயம் ஒன்றையும் மேற்கொண்டார். இலங்கையுடனான பரஸ்பர நட்புணர்வு மேம்பாடடைய வேண்டுமானால், அமெரிக்க தெளிவாக்க விரும்புவது என்னவென்றால், ஜனநாயக முன்னேற்றம் தொடர்வதுடன், உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடைபெற்ற கொலைகளுக்கும் கட்டாயமாக பொறுப்புக்கூற வேண்டும்.

இலங்கைக்குத் தேவை, கூடுதலான முதலீடுகளுடன் கூடிய நல்ல உறவுகள். எப்படியிருந்த போதிலும், மியன்மாரைப் பொறுத்த வரையில், அதன் வளர்ச்சி வெளி அழுத்தங்களைவிட உள்நாட்டுக் காரணிகளிலும், தீர்மானங்களிலுமே தங்கியுள்ளது.

இந்த இரு நாடுகளைப் பொறுத்த வரையிலும் அமெரிக்கக் கொள்கையைப் பொறுத்த வரையில் – திட்டுதல் (Jawboning), தடை போடுதல் (Sanctions), கையாளுதல் (manipulation), வாக்குறுதி அளித்தல் (Promise) என்பன பயனுள்ளவை. ஆனால் இலங்கையிலும், மியன்மாரிலும் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள சாதகமான சூழலில் அவை முடிவானவை அல்ல.

**குறிப்பு:** இலங்கையில் ஜனவரி 08 இலும், ஓகஸ்ட் 17 இலும் நடந்த ஆட்சி மாற்றங்கள் அமெரிக்காவுக்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது என்பதை, அந்நாட்டின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் அறிக்கை புலப்படுத்துகிறது. அதுமட்டுமின்றி, சீனாதான் அமெரிக்காவின் பிரதான தலைவலி என்பதும் புலனாகின்றது. *

## பேராசிரியர் க.குணரட்ணம் காலமானார்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும், விஞ்ஞானபீட பீடாதிபதியும், வாழ்நாள் பேராசிரியருமான கந்தையா குணரட்ணம் அவர்கள் செப்ரெம்பர் 9ஆம் திகதி கொழும்பில் காலமானார். யாழ்.பல்கலைக்கழகம் 1975இல் ஆரம்பிக்கப்பட்ட போது, அதன் முதல் தலைவரான பேராசிரியர் க.கைலாசபதி அவர்களுடன் இணைந்து அப்பலைக்கழகத்தை கட்டியெழுப்புவதற்கு உழைத்தவர்களில் பேராசிரியர் குணரட்ணமும் ஒருவராவார். அங்கு பௌதிகத்துறை, கணினி விஞ்ஞானத்துறை என்பனவற்றை உருவாக்குவதில் அவர் பெரும் பங்கு வகித்தார்.

பேராசிரியர் குணரட்ணம் அவர்களது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு 'வானவில்' சார்பாக எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாருக்கு எமது அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

-வானவில் ஆசிரியர் குழு

## யாழ்ப்பாணத்தின் மூத்த பிரஜைக்கு அஞ்சலி!

யாழ்ப்பாண மண்ணில் வாழ்ந்த மிகவும் வயது முதிர்ந்த மூத்தவரான பெரியார், "காத்தி அப்பு" எனப்படும் கணபதி காத்தி அவர்கள் தமது 113ஆவது வயதில் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி நவாலியில் காலமானார். தனது பிள்ளைகள் அனைவரும் இறந்துவிட்ட நிலையில், உறவினர்கள் வீட்டில் வசித்து வந்த அவர் தனது இறுதிக் காலம்வரை, தனது நாளாந்தக் கடமைகளைத் தானே செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தனது நீண்ட வாழ்விற்கு தான் கடைப்பிடித்து வந்த முறையான உணவுப் பழக்கமும், போதையற்ற வாழ்வுமே காரணம் எனக் கூறிச் சென்றிருக்கிறார் காத்தி அப்பு.

எமக்கு நேரடியாக அவரைத் தெரியாவிட்டாலும், யாழ்.மண்ணின் வைரத்துக்கும் வைராக்கியத்துக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த காத்தி அப்புவின் மரணத்துக்கு 'வானவில்' தனது இரங்கலைத் தெரிவிப்பதுடன், தனது அஞ்சலியையும் செலுத்துகிறது.

-வானவில் ஆசிரியர் குழு

முன்பக்கத்தொடர்ச்சி...

உள்ள 7 உறுப்பினர்களில் கூட்டமைப்புக்கு ஆக 3 தான் கிடைக்கும் என்ற நிலையும் இருந்தது. ஆனால் தேர்தல் முடிவு அப்படி அமையவில்லை. அப்படியானால் இடையில் என்ன நடந்தது?

கூட்டமைப்பினர் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காகப் பொய்யான ஒரு கருத்தை உருவாக்கினார்கள்.

அதாவது, 'ஜனாதிபதித் தேர்தலில் நாம் மைத்திரியை ஆதரித்ததால்தான் அவர் வெற்றி பெற்றிருக்கிறார். அதுபோல, நாம் போட்டியிடாத வடக்கு கிழக்கிற்கு வெளியே ஐக்கிய தேசிய முன்னணியை ஆதரித்து வெற்றி பெற வைத்து, நாமும் அதிக உறுப்பினர்களைப் பாராளுமன்றம் அனுப்பினால் நிச்சயம் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணலாம்' என்பதே கூட்டமைப்பின் இம்முறைத் தேர்தல் பிரச்சாரமாக இருந்தது.

அவர்களது பிரச்சாரம் ஓரளவு மக்களிடமும் எடுபட்டது. அதனால்தான் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்குக் கிடைக்க வேண்டிய 2 உறுப்பினர்களில் ஒன்று குறைந்தது. அதேபோல, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்குக் கிடைக்க இருந்த ஒரு ஆசனமும் இல்லாமல் போனது.

சரி, இப்பொழுது கூட்டமைப்பு விரும்பியவர் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார். அவர்களுக்குப் பிடித்தமான ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியையும் பிடித்துள்ளது. எனவே இப்பொழுது தன்னும் இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக ஜனாதிபதியுடன் கூட்டமைப்பு என்ன பேசியது என்பதை சம்பந்தன் வெளிப்படுத்தலாம் தானே? ஏன் இன்னமும் மௌனம் காக்கிறார்.

*முன்னைய மகிந்த அரசு இனப் பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபை முறைமையைத்தான் ஏற்றுச் செயல்பட்டது. ஆனால் அது உரிய தீர்வல்ல என்பதுதான் கூட்டமைப்பின் அப்போதைய நிலைப்பாடு. அதனால்தான் புலிகள் இருந்த காலத்தில் கூட்டமைப்பு மாகாணசபைத் தேர்தல்களில் பங்குபற்றவில்லை. புலிகள் அழிந்த பின்னர் கூட்டமைப்பு மாகாணசபைத் தேர்தலில் முதன்முறையாகப் பங்குபற்றியபோது,*

அதற்குச் சொன்ன காரணம், 'இனப் பிரச்சினைக்கு மாகாணசபை முறைமை தீர்வல்ல என்ற போதிலும், துரோகிகள் மாகாணசபையைக் கைப்பற்றக்கூடாது என்பதற்காகவே போட்டியிடுகிறோம்' என்பதாகும்.

எனவே, கூட்டமைப்பின் இனப் பிரச்சினைக்கான தீர்வு, அவர்களுடைய பழைய சமஸ்டிக் கொள்கைதான். (வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு என்ன நடந்தது என்பது அவர்களுக்கே மறந்துபோன விடயம்) அதைப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் கூட்டமைப்புத் தலைவர்கள் சிலர் வலியுறுத்திக் கூறியுமுள்ளனர்.

ஆனால், இதுபற்றி தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் பிரஸ்தாபித்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, 'எந்தக் காரணம் கொண்டும் தமிழ் மக்களுக்கு சமஸ்டி வழங்கப்படமாட்டாது. அதுபற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் நடாத்தப்படமாட்டாது' எனத் தெட்டத் தெளிவாகக் கூறினார். அவரது இந்தக் கூற்றைத் தமிழ் மக்கள் சரியாகக் கவனத்தில் எடுத்திருந்தால், கூட்டமைப்புக்கோ, ஐக்கிய தேசிய முன்னணிக்கோ வாக்களித்திருக்கமாட்டார்கள்.

அதுமட்டுமின்றி, பாராளுமன்றத் தேர்தல் முடிந்த பின்னர் இராணுவ வைபவம் ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரி, 'இலங்கைக்கு ஒற்றையாட்சி முறையே சிறந்தது. அப்பொழுதுதான் நாடு ஸ்திரமாகவும் ஐக்கியமாகவும் இருக்கும்' எனத் தெரிவித்துள்ளார். இதன்படி, ரணிலினதும், மைத்திரியினதும் கருத்துக்களை வைத்துப் பார்த்தால், தமிழ் பேசும் மக்களுக்கு இன்றைய அரசும் அதிகாரப் பகிர்வை வழங்கப் போவதில்லை என்ற உண்மை புலனாகும். அதாவது தமிழ் மக்கள் மீண்டுமொருமுறை ஏமாந்து போயிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

இன்னும் சொல்லப் போனால், மகிந்த ஆட்சியில் இருந்திருந்தால், அவரை மிரட்டுவதற்காகத் தன்னும் இந்தியாவும், மேற்கு நாடுகளும் தமிழ் மக்களுக்கு ஏதாவது வழங்கும்படி அவரை நிர்ப்பந்தித்திருப்பார்கள். இப்பொழுது அவர்களுக்குத் தேவையானவர்கள் இலங்கையில் ஆட்சிக்கு வந்துவிட்டதால், அவர்கள் அந்த ஆட்சியுடன் நட்புறவை வலுப்படுத்தித் தங்கள் பூகோள நலன்களைப் பாதுகாத்துக் கொள்வார்களே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினையைக் கவனத்தில் எடுக்கமாட்டார்கள். அதன் ஒரு வெளிப்பாடுதான், மகிந்த ஆட்சியின்போது, இலங்கைக்கு எதிராக கடும் நிலைப்பாடு எடுத்து ஐ.நாவின் ஜெனிவா கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றிய அமெரிக்கா தனது போக்கைத் தளர்த்தியமை.

இந்தச் சூழ்நிலையில், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ன விதமான தீர்வை அரசிடமிருந்து பெறப் போகின்றது, எப்படிப் பெறப் போகின்றது என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டும். இனியும் அது 'இரகசியமான விடயம்' எனக் கூட்டமைப்புத் தலைவர்கள் மக்களை ஏமாற்றி அவர்களை முட்டாள்களாக்கக்கூடாது.

மறுபக்கத்தில், தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக ஜனாதிபதியிடமும், தற்போதைய பிரதமர் ரணிலிடமும் தேர்தலுக்கு முன்னர் பிரஸ்தாபித்தபோது, 'தேர்தல் முடிந்த பின்னர் அது பற்றிக் கவனம் செலுத்தப்படும்' எனக் கூறியிருந்தனர். இப்பொழுது உடனடியாக அவர்கள் அந்தக் கவனத்தைச் செலுத்த வேண்டும். இனியும் ஒத்திப்போட முடியாது. ஏனெனில் சுதந்திரத்துக்குப் பின்னர் கடந்த 67 வருடங்களாக இனப் பிரச்சினைதான் இலங்கையின் தலையாய பிரச்சினையாக, கோரமான உள்நாட்டு யுத்தம் வரை செல்லும் பிரச்சினையாக இருந்திருக்கிறது.

எனவே, இனப் பிரச்சினைக்கு மைத்திரி – ரணில் அரசு என்ன தீர்வைக் காணப் போகின்றது என்பதை அவர்களும் விரைவில் வெளிப்படுத்த வேண்டும். இல்லாவிடின் மீண்டும் இன அடிப்படையிலான மோதல்கள் நிச்சயம் நாட்டில் தலைதூக்கும்.

ஏனெனில், தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்தது, மலையக இந்திய வம்சாவழி மக்களின் வாக்குரிமையையும் பிரஜாவுரிமையையும் பறித்தது, பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கையையும் சந்திரிக அரசு கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தவிடாமல் தடுத்தது, நாட்டில் தமிழ் மக்களுக்கெதிராக பல தடவைகள் மோசமான இன வன்செயல்களை முன்னின்று நடாத்தியது, இறுதியாக இனப் பிரச்சினையை யுத்தமாக மாற்றியது என, தொடர்ச்சியான பேரினவாத நடவடிக்கைகளை மேற்கொண்ட ஐக்கியக் கட்சிதான் இன்று அதிகாரத்தில் இருக்கின்றது. அதுமட்டுமல்ல, அந்த அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 'சமஸ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை' எனத் திட்டவட்டமாகச் சொல்லியும் விட்டார்.

இந்த நிலையில், மைத்திரி – ரணில் அரசு இனப் பிரச்சினைத் தீர்வுக்கு என்ன திட்டம் வைத்திருக்கிறது. அதை எப்பொழுது, என்ன வடிவத்தில் நிறைவேற்றப் போகின்றது? என்ற கேள்விகள் எழுவது இயல்பானது. அரச தரப்பும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் மக்களை ஏமாற்றுவதற்கு தொடர்ந்தும் 'கண்ணா மூச்சி விளையாட்டு' விளையாடாமல், தமது நிலைப்பாடுகளை காலம் தாழ்த்தது நாட்டு மக்களுக்கு வெளியிட வேண்டும். அதுவே இன்றைய உடனடித் தேவை. *

# அமரர் கார்த்தி ஒரு ஸ்தாபனம்

- க.சிவராமலிங்கம்

(முன்னாள் பதில் அதிபர் — யாழ்.இந்துக் கல்லூரி)

(வட இலங்கையின் சிறந்த கல்விச் சிந்தனையாளர்களில் ஒருவரும், இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும், அவ்வியக்கத்தின் விதைகளை வடக்கில் ஊன்றிய முன்னோடியுமான தோழர் மு.கார்த்திகேசன் அவர்கள் மறைந்து 38 வருடப் பூர்த்தியை (1977 செப்ரெம்பர் — 2015) நினைவுகூரும் முகமாக, அவரது சக ஆசிரியத் தோழர் ஒருவரால் எழுதிய கட்டுரை இங்கே பிரசுரமாகின்றது.)

**பொ**துவுடமைத் தத்துவம் தோல்வி கண்டு விட்டது என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். தத்துவம் என்றும் தோல்வி காண்பதில்லை. தத்துவம் எல்லோருக்கும் புரிவதுமில்லை. புரியாதவர்கள்தான் தோல்வி கண்டவர்கள். பொதுவுடமைத் தத்துவத்தின் தந்தை கார்ல்மாக்ஸ். இவரின் பின் இத்தத்துவத்தை விளங்கிக் கொண்டவர்களும், நடைமுறைப் படுத்தியவர்களும் மிகச் சிலரே. இவ்வொரு சிலரில் ஒருவர் அமரர் மு.கார்த்திகேசன். தத்துவத்தின் 'சாரத்தை' கேட்போர் சிந்தனையில் நிலை நிறுத்த வல்லவராகவும் வாழ்ந்தவர்.

தத்துவத்தை ஒரு உளப் பயிற்சிக்கு (Mental Exercise) உரியதாகக் கொள்ளாது வாழ்ந்து காட்டிய உன்னத மனிதர் மு.கார்த்திகேசன். ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் உறுதுணையாகவும், நசுக்கப்பட்டவர்களின் நலன் காக்கவும் தீரனாக வாழ்ந்தவர். கொள்கையை ஏற்க மறுத்தவர்களும் எதிரிகளும் கூட, 'காத்தி' ஒரு கனவான் – Gentleman – என்று நெஞ்சிலிருந்து பேசி அன்பு பாராட்டி நட்புக் கொள்ள அவாவும் பெரியோன் இவர். மாற்றுக் கருத்துடையோர் இடத்தும் அன்பாலும் பண்பாலும் முதலிடம் பெற்றவர் அமரர் மு.கா.

ஆங்கிலமும் செந்தமிழும் இவர் எழுத்தால் பேச்சால் பெருமை பெற்றன. தமிழில் கவிதை புனையும் ஆற்றலும் இவர்பால் தானே வந்து சேர்ந்தது. வாக்காலும் மனத்தாலும் எதிரியைக் கூடச் சீண்டத் தெரியாத இவர் பெருமையை 'சாமானியர்கள்' எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? இச்சமுதாயப் பலவீனத்தால், 'காத்தி' சாதிக்கக் கூடியவைகூட எமக்குச் சாத்தியமாகவில்லை. எம்மவரிடையே காணப்படும் நேரிய சிந்தனை வறுமைக்குக் காரணம், 'காத்தி' போன்ற உன்னத மனிதர்களை நாம் இனங்காணத் தவறியமையே என்பது மறுக்க முடியாத உண்மை. இவர் நினைவு என்றும் பசுமையானது. 'காத்தி' ஒரு தனிமனிதனல்ல. ஒரு சமுதாய ஸ்தாபனம்.

"ஒரு தெளிவான கருத்தைப் பெறுவதற்காக முதலில் சோசலிசம் என்றால் என்ன? என்பதை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். இன்று இலங்கையில், சோசலிசம் பற்றி அதிகமான குழப்பங்கள் நிலவும் காரணத்தால் இது அவசியமாகும். உற்பத்திக் கருவிகளின் மீதான அரசின் கட்டுப்பாடோ அல்லது உற்பத்திக் கருவிகளை அரசுடைமை ஆக்குவதோ கூட சோசலிசமாகாது. அரசு யாருடையது? என்பதே கேள்வியாகும். அரசு முதலாளித்துவ வர்க்கத்தினுடையதாக இருந்தால், அது முதலாளித்துவ சமுதாயமாகும். அரசு தொழிலாளி வர்க்கத்துனுடையதாக இருந்தால் மட்டுமே சோசலிச சமுதாயமாக இருக்க முடியும்."

**– தோழர் கார்த்திகேசன்**

(இந்தக் கட்டுரை தோழர் மு.கார்த்திகேசன் அவர்களின் 25ஆவது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்ட 'கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்' என்ற தொகுப்பு நூலிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது) *

## 'களனி' வாசகர்களுக்கு

**கி**ளிநொச்சி மண்ணிலிருந்து முதன்முதலாக வெளிவந்த சஞ்சிகை, கிளிநொச்சி மக்கள் கலாச்சாரப் பேரவையால் வெளியிடப்பட்ட 'களனி' என்ற கலை - இலக்கிய — அறிவியல் காலாண்டு இதழ் ஆகும். அது வெளிவரத் தொடங்கி இன்று 44 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், அதன் தாக்கம் இன்றும் பலராலும் உணரப்படுகின்றது.

1971இல் நாட்டில் ஒரு ஆயுதக் கிளர்ச்சி நடந்து, மக்களின் ஜனநாயக உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில், 'களனி' முற்போக்கு சக்திகளின் களமாகவும், வடிகாலாகவும் செயல்பட்டது. அவ்வருட பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 'களனி' யின் நான்கு இதழ்களே கிளிநொச்சி மண்ணிலிருந்து வெளிவந்தன. பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து 70களின் பிற்பகுதியில் இரண்டு இதழ்கள் வெளிவந்தன. ஆக மொத்தமாக ஆறு இதழ்கள் மட்டுமே.

ஆனாலும் அதில் வெளிவந்த கதைகள், கவிதைகள், கட்டுரைகள் என்பன காலத்தை விஞ்சி நிற்பனவாகவும், கிளிநொச்சி மண்ணுக்கு பெருமை சேர்ப்பனவாகவும் இன்றும் திகழ்கின்றன. எனவே பலரின் வேண்டுகோளுக்கு இணங்க 'களனி' இதழ்களில் வெளிவந்த கதை, கவிதை, கட்டுரை போன்ற முக்கியமான படைப்புகளைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட முடிவு செய்துள்ளோம். ஆனால் அதற்கு இடையூறாக இருப்பது எம்மிடம் 'களனி' யின் எல்லா இதழ்களும் இல்லாத குறையே.

எனவே எமது இந்தப் பணியினைப் பூர்த்தி செய்வதற்கு உதவியாகத் தயவு செய்து 'களனி' இதழ்களை வைத்திருப்பவர்கள் அதை நாம் பிரதி எடுப்பதற்கு இரவலாகவோ அல்லது சன்மானத்தின் அடிப்படையிலோ தந்து உதவ முடியுமா என்பதைப் பின்வரும் மின்னஞ்சல் முகவரி மூலம் தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மின்னஞ்சல் முகவரி: kikalani71@gmail.com

இவ்வண்ணம்

அன்புடன் ,

'களனி' வெளியீட்டாளர்கள்